* 503 *Q*.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in Rajapadmapuram Colony in Tiruttani taluk ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : வீடு மனையற்ற 69 அரிசனங்களுக்கு, ராசபத்மபுரத்திலுள்ள, ச. எண். 44/1ல் உள்ள புறம்போக்கு நிலத்தில், 10–12–1974 அன்று பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, இது குறித்து நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய தேவை இல்லை.

தொழுப்பேடு அரிசனக் குடியிருப்பு.

*504 வினு—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் தொழுப்பேடு அரிசன குடியிருப்பு பகுதியில் அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :

(அ) ஆம்.

(இ) தொழுப்பேடு அரிசனக் குடியிருப்பு பகுதியில் அரிசனங்களுக்காக 100 வீடுகள் கட்டும் பணியைத் தமிழ் நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

அச்சிறுபாக்கத்தில் அரிசன மாணவர் விடுதி.

*505 வினு—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கத்தில் அரிசன மாணவர்கள் விடுதிக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :— (அ) ஆம்.